## ஹிக்கடுவ நகர சபை

## காலி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 24 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்டம்பர் 22 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹிக்கடுவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் கணக்கு மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவித் தொகை இடையே காணப்பட்ட ரூபா 2,229,328 இற்கான வித்தியாசத்தை இனங்காணாமல் நாட்குறிப்பு இலக்கம் 07 இன் மூலம் திரண்ட நிதிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 80,450 இற்கான நிலையான சொத்துக்கள், மூலதன உதவி என நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமையால் திரண்ட நிதிய மற்றும் நிலையான சொத்துக்கள் ரூபா 80,450 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் போது கணிப்பீட்டுச் சபை அறிக்கையின் மூலம் விதந்துரைக்கப்படாமல் நாட்குறிப்பு 39 இன் மூலம் ரூபா 511,833 இற்கான ஆயுள்வேத இருப்பு கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டு இருந்ததுடன் அவ்வாறு அகற்றப்பட்டதை கணக்கீடு செய்யும் போது பிழையான முறையில் ரூபா 511,833 இனால் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவித் தொகை கணக்கு வரவு வைக்கப்பட்டுள்ளமை சரி செய்யப்படாமையால் நிதிக் கூற்றுக்களில் ஆயுள்வேத இருப்பு மற்றும் மூலதன செலீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் மீதி ரூபா 511,833 வீதம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்தல் ரூபா 312,305 உம் மற்றும் நன்கொடை ரூபா 16,790 உம் ஆக கூட்டுத்தொகை ரூபா 329,095 உம் நாட்குறிப்பு இலக்கம் 52 இன் மூலம் ரூபா 577,607 தொகை என மூலதனப்படுத்தியமையால் நூலகப் புத்தகங்கள் மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கு மீதி ரூபா 248,512 வீதம் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 307,845 இற்கான நிலையான சொத்துக்கள் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 147,790 இற்கான நிலையான சொத்துக்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 03 நிலையான சொத்துக்கள் என்பன மூலதனப்படுத்தப்படவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது ரூபா 20,606 இற்கான நிலையான வைப்புக்கான வட்டி வருமானத்திற்கு எடுக்கப்படாமையால் நிதிக் கூற்றுக்களில் ரூபா 20,606 இனால் வட்டி வருமானம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(எ) ஆண்டிற்கான முத்திரை வரி செலுத்துதல் ரூபா 23,291 இனை பலவின வைப்புக்கள் கொடுப்பனவு என குறிப்பிட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய முத்திரை வரி கணக்கு ரூபா 23,291 இனால் மிகையாகவும், செலுத்த வேண்டிய பலவின வைப்புக் கணக்கு ரூபா 23,291 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 13,441,517 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 10,013,579 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 3,427,938 இனால் கடன்கொடுத்தோர் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான நிர்மாண செலவுகள் ரூபா 7,007,402 தொகை எனினும் மூலதன செலவுக் கணக்கிற்கு ரூபா 5,552,748 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 1,454,654 இனால் மூலதனச் செலவுகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 10,000,000 தொகை எனினும் பெற வேண்டிய முத்திரைக் கட்டண கடன்பட்டோர் ரூபா 9,584,921 ஆக காணப்பட்டமையால் ரூபா 415,079 இனால் கடன்பட்டோர் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஓ) முன்னைய ஆண்டிற்கான நிர்மாண வேலை ஒன்றான தெல்கஹதுவ கட்டுகெலிஹ பின்கந்த கிராம அலுவலர் வட்டாரத்தில் நிர்மாணிக்கப்படும் சனசமூக நிலையம் II ஆம் கட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 679,962 இனை முத்திரை கட்டணப் பெறுவனவு என பதிவு செய்யப்பட்டுள்ளமையால் நிர்மாண வேலை கடன்பட்டோர் ரூபா 679,962 இனால் மிகையாகவும் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 679,962 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலை ஒன்றான ஹென்னாதொட கொரககஸ் பொக்க மற்றும் படுவத கம்மடுவத்த சனசமூக நிலையம் இரண்டின் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக பெற்றிருந்த ரூபா 1,000,000 தொகை முத்திரைக் கட்டணம் பெறுவனவு என காட்டப்பட்டமையால் ஆண்டிற்கான மூலதன உதவி மற்றும் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(க) மீளாய்வாண்டின் போது உடுகல்பிடிய சனசமூக நிலையத்தின் மீதி வேலையை பூர்த்தி செய்யும் நிர்மாண வேலை மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிட ஒழுங்குபடுத்தும் நிர்மாண வேலைக்காக ரூபா 1,050,000 பெற வேண்டிய மூலதன உதவி கணக்கிற்கு செலவு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மூலதன உதவி மற்றும் பெற வேண்டிய மூலதன உதவி அதே தொகைகளால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ங) கடந்த வருடத்தின் 03 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 540,000 தொகைக்காக கடந்த வருடம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் பெற வேண்டிய மூலதன உதவிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய

மூலதன உதவிக் கணக்கு மற்றும் திரண்ட நிதியம் ரூபா 540,000 வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ச) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காகிதாகிகள் இருப்பு ரூபா 212,212 தொகை எனினும் அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 159,240 என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 52,972 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

06 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 9,732,533 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 தொங்கல் கணக்குகள்

-------------------------------------

மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 2,163,259 இற்கான வரவு மீதிக்கு நாட்குறிப்பு இலக்கம் 04 மற்றும் 05 இன் மூலம் இனங்காணப்பட்ட ரூபா 205,368 தொகை வரவு வைக்கப்பட்டு நாட்குறிப்பு இலக்கம் 09 இன் மூலம் ரூபா 1,620,400 தொகையினை இனங்கண்டு செலவு வைத்த பின்னர் மீதியாகிய ரூபா 748,227 இற்கான மீதியினை இனங்காணப்படவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 73,566,409 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், தொக்கு பதிவேடு மற்றும் பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 12,576,438 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,342,124 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வீத வரி

--------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 18,381,744 இற்கான வீத வரி நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு

170அ(2) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 குத்தகை

----------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 6,843,114 இற்கான குத்தகை நகர சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 170(அ)1 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

-----------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 676,669 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170அ(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 822,501 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,584,922 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.5 சுற்றுலா ஹோட்டல்களில் இருந்து 1% அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படாமை

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 164 இன் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலை மற்றும் தங்குமிடங்களுக்காக முன்னைய ஆண்டின் பெறுவனவுகளில் 1% அனுமதிப்பத்திரக் கட்டணம் ஒன்று அறவிடப்பட வேண்டும். எனினும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடத்தப்படும் சுற்றுலா அதிகார சபையின் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தங்குமிடங்கள் 04 இல் இருந்து 1% அனுமதிக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 திசெம்பர் 13 திகதிய இலக்கம் : 1162/12 கொண்ட இலங்கை குடியரசின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் ஹிக்கடுவ நகர சபை 2001 ஏப்ரல் 15 திகதி முதல் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. 2002 ஏப்ரல் 15 ஆந் திகதி முதல் செயற்படும் விதமாக முன்னர் ஹிக்கடுவ பிரதேச சபைக்கு சொந்தமான காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் நகர சபைக்கு சாட்டப்படும் பகுதி அறுதியாக பிரித்து ஒதுக்குதல் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஆகஸ்ட் 20 மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் 74 இலக்க சட்டத்தினால் திருத்தப்பட் 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வெளிப்படுத்தும் சட்டத்தின் தேவைக்கு ஏற்ப சபையின் உப தலைவர் மற்றும் 07 அங்கத்தவர்கள் 2014 ஆண்டிற்கான

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தும் கூற்று கணக்காய்வத் திகதியாகிய 2015 ஆகஸ்ட் 20 திகதி வரை சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவியணிக் கடன்

--------------------------------

சபையில் சேவையாற்றிய ஊழியர்கள் (மாற்றம் பெற்றுச் சென்றுள்ள/ ஓய்வு பெற்றுள்ள) 04 நபர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 183,769 இற்கான கடன் மீதியில் அறவீடுகள் ஒரு வருடம் முதல் 06 வருடங்கள் வரை காலப் பகுதியில் நிலுவையாகக் காணப்பட்டது.

சபையில் கடமை புரியும் 13 பிரதியீட்டு ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 40,900 இற்கான கடன் மீதி ஒன்று 2 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலப் பகுதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட போதும், அப் பணத்தை பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஊழியர்கள் பிணை வைப்பு

----------------------------------------------

காசுக்குப் பொறுப்பானவர் மற்றும் ஆதனங்களை தடைசெய்யும் அலுவலர்கள் இருவர் தவிர ஏனைய பிணைகள் வைப்புச் செய்ய வேண்டிய அலுவலர்களினால் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 880 மற்றும் 881 இன் பிரகாரம் 2015 ஆகஸ்ட் 20 கணக்காய்வுத் திகதி வரை தேவையான பிணைப் பணம் வைப்புச் செய்திருக்கவில்லை.

(இ) முற்பணம் செலுத்துதல்

---------------------------------------

சபை நிதியத்தில் இருந்து அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 2014 ஆண்டின் போது வழங்கியிருந்த முற்பணங்களில் இருந்து ரூபா 57,000 உம், 2014 ஆண்டிற்கு முன்னர் வழங்கியிருந்த முற்பணங்களில் இருந்து ரூபா 147,665 உம் ஆக கூட்டுத்தொகை ரூபா 204,665 தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஆகஸ்ட் 20 திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------

சபையினால் பயன்படுத்தப்படும் 14 வாகனங்களின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஆகஸ்ட் 20 திகதி வரை அவ் வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

3.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-------------------------------------------------------

பயன்படுத்தப்படாமல் அழிவு நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் அகற்றுதல் பற்றி ஜனாதிபதிச் செயலாளரினால் 2013 ஜுன் 05 திகதிய இலக்கம் : PCMD/PR/2013 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவடையும் நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அகற்றுவதற்கான செயற்பாடு ஒன்றினை தயாரிக்கும் படி அறிவித்திருந்த போதிலும், பெக்கோ லோடர் ஒன்று, தீ அணைக்கு விபத்து வண்டி, களி பவுசர் மற்றும் டிரக்டர் ஒன்று கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஆகஸ்ட் 20 திகதி வரையும் திருத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் இடையே கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்